Koviloor Digital Library

கழக வெளியீடு: எஉக

1/6

மலர் வழிபாட்டு வரிசை - ரு

அம்பலவாணர் வழிபாடு

(கoஅ போற்றி)

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)

கோவிலூர் ஆண்டவர்
A. No. 3563
நூலகம், கோவிலூர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

Koviloor Digital Library

முதற் பதிப்பு: செப்டம்பர், 1954.
இரண்டாம் பதிப்பு: திசம்பர், 1954.

பதிப்புரை

இறைவன் எல்லாம் வல்லவன்; அவனால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களும் நிகழ்த்தப்பெறுகின்றன. இவைகட்காக அவன் பல்வகை உருவும் ஆற்றலும் கொள்கின்றான்; அவற்றுள் ஒன்றே அம்பலவாணர் திருவடிவு.

இவ்வடிவுகொடு, இறைவன் வான வெளியில் நடஞ்செய்து உலகுயிர்களை இயக்குகின்றான் என்பது, நம் ஆன்றோர் கண்ட உண்மை.

இக் கருத்தை நிலைக்களனாகக்கொண்டு, அம்பலவாணர் திருவுருவமைத்துப் பண்டுதொட்டே வழிபாடாற்றி வருவாராயினர். அதற்கு இறைவன் திருப்பெயர்களையும், திருவிளையாடல்களையும் எடுத்து ஏற்றிக்கூறி வழிபடல் உயர்ந்தது. அதினும் தாய்மொழியில் மொழிந்து குறையிரந்து வேண்டி நலம் பெறல் சாலச்சிறந்தது. அதற்கு மணமும் மென்மையும் நலனும் மிக்கன மலர்கள். அவைகளைக்கொண்டு ௧0அ, ௧00அ என்னும் எண்ணிக்கையொடு வழிபடுவது மனவுறுதியை மிகுவிப்பதாகும்.

இக் குறிக்கோளை முதன்மையாகக்கொண்டு மலர் வழிபாட்டு வரிசை ௧, ௨, ௩, ௪ தலைப்பில், **'பிள்ளையார் வழிபாடு' 'முருகப்பெருமான் வழிபாடு' 'சிவபெருமான் வழிபாடு' 'உமையம்மை வழிபாடு'** என்னும் நான்கு நூல்களையும் பல நூல்களிலுள்ள புகழ்ப்பாக்களின் தொகுப்புடன் அண்மையில் அடுத்தடுத்து வெளியிட்டுள்ளோம். இஃது, அவ்வரிசையில் ரு-ஆவதாக **'அம்பலவாணர் வழிபாடு'** என்னும் பெயரால் வெளிவருகின்றது.

இதைச் செப்பனிட்டுதவிய தணிகைமணி, இராவ்பகதூர் திரு. வ. சு. செங்கல்வராயபிள்ளை, எம். ஏ., அவர்கட்கு எமது உளம்நிறைந்த நன்றி.

தமிழ்மக்கள் இதனையும், இதற்கு அடுத்து வெளிவரும் மற்ற வழிபாட்டு வரிசை நூல்களையும் வாங்கிக் கற்று இறைவன் திருக்கோவில்களிலும் தத்தம் இல்லங்களிலும் வழிபாடுசெய்து, அம்பலவாணரின் ஆரருள்பெற்று இன்புற விழைகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

அப்பர் அச்சகம், சென்னை 1.—II-E. C. 10200.

Koviloor Digital Library

\\6

அம்பலவாணர் வழிபாடு

க. நூற்றெட்டுப் போற்றி

*வேண்டுகோள்

திருச்சிற்றம்பலம்

அன்பாய் அருட்கூத் தாடுவோய் போற்றி
என்பால் கலந்த இறைவா போற்றி
ஆகம முடிமேல் அமர்ந்தாய் போற்றி
ஏகமும்[1] நடஞ்செய் எம்மான் போற்றி
ரு. இகபரம் அருளும் ஈசா போற்றி
அகங்கரை நடனத் தரசே போற்றி
ஈறில் மறைமுதல் இடையோய் போற்றி
மாறில் நடமிகு வள்ளால் போற்றி
உரையுணர் விகந்த ஒருவ போற்றி
க0. அரைபுலித் தோலணி அப்பா போற்றி

"எல்லாம் வல்ல அம்பலவாணப் பெருமானே !

**..............................ஊர்,..............................மகன் ....பொருட்டு, இந்த நல்ல நாளில் செய்யப்பெறும் மலர்வழிபாட்டை ஏற்றருளி, அவர்கட்கும் அவர்கள் குடும்பத்தார்க்கும் நின் திருவடி அன்பும், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும், மக்கட்பேறும், மற்றும் பிற நலங்களும் நாளும் பெருகி நீடூழி வாழ அருள்புரிவாயாக," என்று ஓதி மலர்வழிபாடு செய்க.*

1. 'ஏகம் - எல்லா இடங்களும்.

Koviloor Digital Library

ஊழி ஊழி உள்ளோய் போற்றி
ஆழியான் காணா அடியோய் போற்றி
எல்லையில் இன்ப நடத்தாய் போற்றி
தொல்லை[1] வினைதீர் சுடரே போற்றி
ஏனோர்க் கரிய ஏந்தால் போற்றி
மானோர் கைக்கோள் மன்னே போற்றி
ஐயா றமர்ந்த அரசே போற்றி
வை[2]கோள் சூலக் கையா போற்றி
ஒருகால் தொழினும் உவப்போய் போற்றி
இருகால் இசைய ஆடுவோய் போற்றி
ஓங்கா ரப்பொருள் உடையாய் போற்றி
பாங்காய் நடனிடு பரனே போற்றி
ஔவியம் இல்லா அரனே போற்றி
தெய்வச் சீர்பெறு செம்பொருள் போற்றி
கற்பார்க் கருள்நடம் காட்டுவோய் போற்றி
சொற்பதங்[3] கடந்த தொல்லோய் போற்றி
காமனைக் காய்ந்த கண்ணுதல்[4] போற்றி
தூமன அடியார் தொடர்போய் போற்றி
கிளரொளி அம்பலக் கிழவோய்[5] போற்றி
வளர்வெளி ஆடிய மாதவ போற்றி
குறுங்கணி[6]க் கொன்றை முடியாய் போற்றி
உறுநடஞ் செய்யும் உரவோய் போற்றி
கூடல் விளங்கு குருமணி போற்றி
ஆடல் அரசே அமர போற்றி
கோளக்கோளக் குறையா நிறைவே போற்றி
அளக்கொணா அன்பர் அமிழ்தே போற்றி

1. தொல்லை - பழமை. 2. வை - கூர்மை. 3. சொல் பதம் - சொல்லின் பொருள். 4. கண்ணுதல் - நெற்றிக்கண். 5. கிழவோய் - உரிமையுடையோனே. 6. குறும்கணி : குறுங் கண்ணி - சிறிய கண்ணியாகத் தொடுத்த மாலை.

Koviloor Digital Library

கோவே கூத்தா குணமலை போற்றி
சேவேற் றுக்கொடித் தேவா போற்றி
அஞ்செழுத் துட்பொருள் ஆனாய் போற்றி
நஞ்சமர் கண்ட நாயக போற்றி
மும்மலம் முருக்கும்[1] செம்மால் போற்றி
செம்மைசேர் நிறத்துச் சேவக போற்றி
அரதன[2] சபைநடம் ஆடியோய் போற்றி
அருளுரு வாகிய அண்ணல் போற்றி
பொன்னம் பலநடம் புரிவோய் போற்றி
இன்தா மிரசபை[3] இசைந்தாய் போற்றி
நெல்வே லியில்நடம் நிலைத்தாய் போற்றி
பல்வே றுருவாய்ப் பரந்தாய் போற்றி
குற்றா லத்துறை கூத்தா போற்றி
உற்றபே ரூர்நடம் உகந்தாய் போற்றி
மதுரையில் மாறி ஆடியோய் போற்றி
குதிரை விற்ற கோவே போற்றி
திருப்புத் தூர்நடஞ் செய்தாய் போற்றி
புலிக்கால் முனிக்கருள் பொன்னடி போற்றி
நிலைக்கப் பதஞ்சலி நேர்ந்தாய் போற்றி
உடுக்கின் ஒருகையால் படைப்பாய் போற்றி
அடுக்குங் கையால் அமைப்பாய் போற்றி
அனல்[4]சேர் கையால் அழிப்பாய் போற்றி
புனல்[5]சேர் செஞ்சடைப் புனித போற்றி
ஊன்றிய அடியால் ஒடுக்குவோய் போற்றி
நான்ற[6]நற் காலால் நல்குவோய் போற்றி
இத்தொழில் ஐந்தும் ஏற்றோய் போற்றி

---

1. *முருக்குதல் - கெடுத்தல்; தீர்த்தல்.* 2. *அரதனம் - இரத்தினம்; மணிக்கல்.* 3. *தாமிரசபை - தாம்பிரத் (செம்பு) தால் செய்த நடனப் பேரவை.* 4. *அனல் - நெருப்பு.* 5. *புனல் - நீர்.* 6. *நான்ற - தூக்கிய.*

Koviloor Digital Library

முத்தொழில் முகக்கும் முகிலே[1] போற்றி
மைப்படி கண்ணி மணாள போற்றி
முப்புரம் எரித்த முதல்வ போற்றி
சங்கக் குழையணி தாயே போற்றி
செங்கண் ஏறுடைச் செல்வா போற்றி
எண்ணோடும் எழுத்தாம் இயலே போற்றி
பண்ணோடு பயனார் பாட்டே போற்றி
புயலே[2] பெயலே புரிவாய் போற்றி
அயலே வெயிலே ஆவாய் போற்றி
கரி[3]யுரிப் போர்வைக் கண்ணுதல் போற்றி
எரியுரு அன்ன இயற்கை போற்றி
மலைமகள் இடங்கொள் மலையே போற்றி
அலை[4]நஞ் சயின்ற ஆதி போற்றி
தெண்ணிலாச் செஞ்சடைச் சீரோய் போற்றி
எண்ணிலா நடம்பயில் எங்கோன் போற்றி
உயிர்வெளி இடையே உறைந்தாய் போற்றி
தயிர்நெய் போலத் தணவாய்[5] போற்றி
கண்ணுள் மணியாய்க் கலந்தாய் போற்றி
பெண்ணுள் அழகாய்ப் பிரியாய் போற்றி
அண்ட உண்டையில் அணுவே போற்றி
மண்டிலந்[6] தோறும் வளர்ந்தாய் போற்றி
ஊற்றாய் உள்ளே ஊறுவோய் போற்றி
காற்றாய் எங்கும் கலந்தாய் போற்றி
ஆறுசேர் சென்னி ஐயா போற்றி
நீறுசேர் மேனி நித்தா போற்றி
அரவோடும் பிறைமுடி அணியாய் போற்றி

---

1. முகில் - மேகம். 2. புயல் - மேகம். 3. கரி - யானை. 4. அலை - கடல். 5. தணத்தல் - பிரிதல். 6. மண்டிலம் - உலகம்.

Koviloor Digital Library

இரவோடு பகல்நடம் இசைப்போய் போற்றி
கூ௦. கோடுகோட்டி ஆடிய கூத்தா போற்றி
படுபாண் டரங்கம் பயின்றாய் போற்றி
காபாலம் ஆடிய காலோய் போற்றி
பூபா தந்தரு புகழோய் போற்றி
மன்றில் ஆடும் மணியே போற்றி
கூரு. என்றுமெம் நெஞ்சில் இருப்போய் போற்றி
மீன்வலை வீசிய மீனவ போற்றி
கான்மா றியாடும் கற்பகம் போற்றி
அத்தா அம்பலத் தாடி போற்றி
முத்தா முதல்வா முக்கணா போற்றி
க௦௦. எட்டுரு வாக இசைந்தாய் போற்றி
நட்டம் பயிலும் நாதா போற்றி
இமயவில் வாங்கிய ஈசா போற்றி
உமையிடம் பிரியா ஒருவ போற்றி
வாழ்க உலகம் வரமருள் போற்றி
க௦ரு. சூழ்கநல் லனவந் துறவருள் போற்றி
நடத்தாய் போற்றி நாயக போற்றி
போற்றி பொன்னடிப் புதுமலர் போற்றி
போற்றி நடமிடு திருத்தாள் போற்றியே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ. புகழ்ப்பாக்கள்

அம்பல வாணன் அடியிணை தொழுவார்க்கு
இன்பமும் வீடும் எளிதினில் வருமே. (க)

—வைராக்கிய சதகவுரைக் காப்பு.

பூமேலான் மாலமரர் போற்றமணி மன்றுடி
யேமேலான் என்னுள்ளத் துண்டு. (உ)

—சங்கற்ப நிராகரணம்.

ஓங்கொளியாய் அருள்ஞான மூர்த்தி ஆகி
உலகமெலாம் அளித்தருளும் உமையம்மை காணத்
தேங்கமழும் மலர்இதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேல் சேர வைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்றிமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினும் உறவணங்கிப் போற்றல் செய்வாம். (ங)

—சிவப்பிரகாசம்.

ஈர்க்கும் புனல்சூடி இளவெண் திங்கள் முதிரவே
பார்க்கும் அரவம்பூண் டாடிவேடம் பயின்றுரும்
கார்க்கொள் கொடிமுல்லை குருந்தமேறிக் கருந்தேன் மொய்த்து
ஆர்க்கும் பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே. (ச)

—திருஞானசம், தேவாரப் பதிகம் : சடு.

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொண்டன்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனுர்க்கு
எல்லை இல்லதோர் அடிமைபூண் டேனுக்கே. (ரு)

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றுல்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே. (சு)

Koviloor Digital Library

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாறன் அடித்தலமே. (எ)

கண்காள் காண்மின்களோ—கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசிநின்றாடும் பிரான் தன்னை
கண்காள் காண்மின்களோ. (அ)

வாயே வாழ்த்துகண்டாய்—மத
யானை உரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான் தன்னை
வாயே வாழ்த்துகண்டாய் (கூ)

உற்றார் யாருளரோ—உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு
உற்றார் யாருளரோ. (க0)

—திருநாவுக்கரசர், தேவாரம்.

அரைசே பொன்னம் பலத்தாடும் அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல் ஏசற்றிருந்தே ஏசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக் காட்சிகொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப் பேசாதிருந்தால் ஏசாரோ. (கக)

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. (கஉ)

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ! (கங)

Koviloor Digital Library

ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே.

குலம்பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாள்தோறும்
அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ. (கரு)

தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ. (கசு)

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. (கஎ)

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே. (கஅ)

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை நாடற்கரிய
நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச் சித்தம்
புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட கூத்தனை
நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர் பாடிப்பொற்
சுண்ணம் இடித்தும்நாமே. (கக)

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி. (உ0)

Koviloor Digital Library
A.No:3562

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணம் ஆகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை அம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தாஉன் சேவடி கூடும்வண்ணம் தோணுேக்கம். (உக)

—திருவாசகம்.

ஒன்பதும் ஆட ஒருபதி ஞுருட
அன்புறு மார்க்கங்கள் ஆறும் உடன் ஆட
இன்புறும் ஏழினும் ஏழைம்பத் தாருட
வன்பதும் ஆடினுன் ஆனந்தக் கூத்தே. (உஉ)

—திருமந்திரம்: உஎஅஉ.

பூமேவு சதுர்முகனும் திருமாலும் போற்றிசெயத்
தேமேவு குழலுமையாள் செழுங்குவளை விழிகளிப்ப
மாமேவும் இதழிநறு மழைதுளிப்ப மணிமன்றம்
தாமேவி நடம்புரியும் தனிப்பொருளை வணங்குவாம். (உங)

—பிரமோத்தரகாண்டம்.

சீராரும் சதுர்மறையும் தில்லைவாழ் அந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராரும் கடல்புடைசூழ் வையமெலாம் ஈடேற
ஏராரும் மணிமன்றுள் எடுத்ததிரு வடிபோற்றி. (உச)

—சேக்கிழார்நாயனுர் புராணம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். (உரு)

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டஞ்செய் வரதர்பொன் தாள்தொழ. (உசு)

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி. (உஎ)

Koviloor Digital Library

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி. (உஅ)
—பெரியபுராணம்.

உண்மையறி வானந்த உருவாகி எவ்வுயிர்க்கும்
உயிராய் நீரின்
தண்மைஅனல் வெம்மையெனத் தனையகலா திருந்துசரா
சரங்கள் ஈன்ற
பெண்மைஉரு வாகியதன் ஆனந்தக் கொடிமகிழ்ச்சி
பெருக யார்க்கும்
அண்மையதாய் அம்பலத்துள் ஆடியருள் பேரொளியை
அகத்துள் வைப்பாம். (உகூ)
—திருவிளையாடற் புராணம்.

வானாகி வளியாகிக் கனலாகிப் புனலாகி
வளர்பார் ஆகி
ஊனாகி உயிராகி ஒன்றாகிப் பலவாகி
உலகம் யாவும்
தானாகிப் புறமாகி அறமாகி அறம்வளர்த்தாள்
தாளம் ஏந்தக்
கோனாகி நடம்புரியும் சித்திரப்பொற் பொதுவுடையான்
கோலம் போற்றி. (௩0)
—திருக்குற்றாலப் புராணம்.

அருமறையின் முழுமுதலாய் அகண்டபரி பூரணமாய்
அனந்த கோடிப்
பெருகொளியாய் உபநிடதம் பேசரிய சித்பரமாய்ப்
பேரா னந்தம்
தருகருணை வடிவாகித் தாம்பிரசபை ஊடுநின்று
தக்கோர் போற்றத்
திருநடனம் புரிந்தருளும் செம்பதுமக் குஞ்சிதத்தாள்
சிந்தை செய்வாம். (௩க)
—திருநெல்வேலிப் புராணம்.

Koviloor Digital Library

KOVILOOR MADA[illegible] KOVILOOR - 630 307 (NEAR) KARAIKUDI (PHONE: 436846)

களிவந் தமுதூறிக் கல்மனத்தை எல்லாம்
　　கசியும் படிசெய்து கண்டறிவார் இல்லா
வெளிவந் தடியேன் மனம்புகுந்த தென்றால்
　　விரிசடையும் வெண்ணீறும் செவ்வானம் என்ன
ஒளிவந்த பொன்னிறமும் தொல்நடமும் காட்டும்
　　உடையான் உயர்தில்லை அம்பலமொன் றல்லால்
எளிவந் தினிப்பிறர்பால் சென்றவர்க்குப் பொய்கொண்டு
　　இடைமிடைந்த புன்மொழியால் இச்சையுரை யோமே.(௩௨)

பெறுகின்ற எண்ணிலி தாயரும் பேறுறும் யானும்என்னை
உறுகின்ற துன்பங்கள் ஆயிர கோடியும் ஓய்வொடுஞ்சென்று
இறுகின்ற நாள்களும் ஆகிக் கிடந்த இடுக்கண்எல்லாம்
அறுகின் றனதில்லை ஆளுடை யான்செம்பொன் அம்பலத்தே.
　　　　　　　　—கோயில் நான்மணிமாலை.

பண்ணேன் உனக்கான பூசையொரு வடிவிலே
　　பாவித் திறைஞ்ச ஆங்கே
　பார்க்கின்ற மலரூடும் நீயே இருத்தியப்
　　பனிமலர் எடுக்க மனமும்
நண்ணேன் அலாமலிரு கைதான் குவிக்களனில்
　　நாணும் என்உளம் நிற்றிநீ
　நான்கும் பிடும்போ தரைக்கும்பி டாதலால்
　　நான்பூசை செய்யல் முறையோ
விண்ணேவி ணுதியாம் பூதமே நாதமே
　　வேதமே வேதாந் தமே
　மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
　　வித்தே அவித்தின் முளையே
கண்ணே கருத்தேஎன் எண்ணே எழுத்தே
　　கதிக்கான மோன வடிவே
　கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
　　கருணு கரக்க டவுளே.　　(௩௪)

வளம்பெறு ஞான வாரிவாய் மடுத்து
　　மண்ணையும் விண்ணையும் தெரியாது
அளம்பெறும் துரும்பொத் தாவியோ டாக்கை
　　ஆனந்தம் ஆகவே அலந்தேன்

Koviloor Digital Library

களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணுக்
காட்சியே சாட்சியே அறிஞர்
உளம்பெறுந் துணையே பொதுவினில் நடிக்கும்
உண்மையே உள்ளவா றிதுவே. —தாயுமானவர்

வானே நிலனே கனலே மறிபுனலே
ஊனேஅவ் ஊனில் உயிரே உயிர்த்துணையே
ஆனேறும் ஏறே அரசே அருட்கடலே
தேனே அமுதமே அளியோங்கள் செல்வமே
யானே புலனும் நலனும் இலனன்றே
ஆனாலும் என்போல்மற் றார்பெற்றார் அம்பலத்துள்
மாநா டகங்காணும் வாழ்வு. (௩௬)
—சிதம்பரச் செய்யுட் கோவை.

விரித்தசெஞ் சடையாட வதனசந் திரனாட
விரிகமல நயனம் ஆட
வெண்முறுவல் நிலவாட நண்ணுதம ருகம்ஆட
வீசுமொரு செங்கை ஆடத்
தரித்தபுலி அதளாட அபயகரம் ஆடஇரு
தங்குதோல் ஊசல் ஆடத்
தாங்குநூல் ஆடமேல் ஓங்குநீர் ஆடவொளிர்
தண்பவள மேனி ஆட
உரித்தகரி உரிஆட உரககங் கணமாட
உபயபரி புரமும் ஆட
ஒருபதம் எடுத்தாட ஒருபதம் மிதித்தாட
உள்ளே மகிழ்ந்து சற்றே
சிரித்துமலை மங்கைகொண் டாடநின் றாடுமுன்
திருநடனம் என்று காண்பேன்
செகம்பணி திகம்பர சிதம்பர
நடேசனே சிற்சொரூ பானந்தனே. (௩௭)
—சிதம்பரநாதர் பதிகம்.

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலும் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி

Koviloor Digital Library

இனித்தநறு நெய்யளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள் ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கலணிந் தருளே.

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே
என்அரசே யான்புகலும் இசையுமணிந் தருளே. (௩௧)

—திருவருட்பா, அருள்விளக்கமாலை: ௩௧.

எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்
இயலுண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும்
மெய்ப்பொருளாம் சிவம்ஒன்றே என்றறிந்தேன் உனக்கும்
விளம்புகின்றேன் மடவாய்நீ கிளத்துகின்றாய் மீட்டும்
இப்பொருள்அப் பொருளென்றே இசைப்பதென்னே பொதுவில்
இறைவர்செயும் நிரதிசய இன்பநடம் தனைநீ
பப்பறவே காணுதியேல் அத்தருணத் தெல்லாம்
பட்டநடுப் பகல்போல வெட்டவெளி ஆமே. (௪௦)

—திருவருட்பா, அனுபவமாலை: ௪௦.

மாற்றறி யாத செழும்பசும் பொன்னே
மாணிக்க மேசுடர் வண்ணக் கொழுந்தே
கூற்றறி யாத பெருந்தவர் உள்ளக்
கோயில் இருந்த குணப்பெருங் குன்றே
வேற்றறி யாதசிற் றம்பலக் கனியே
விச்சையில் வல்லார் மெச்சும் விருந்தே
சாற்றறி யாதஎன் சாற்றுங் களித்தாய்
தனிநட ராசஎன் சற்குரு மணியே. (௪௧)

—திருவருட்பா, சற்குணமாலை: ௧.

Koviloor Digital Library

மருந்தறியேன் மணியறியேன் மந்திரமொன் றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை அறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்
செய்தறியேன் மனமடங்கும் திறத்தினில்ஓர் இடத்தே
இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவும் அறியேன்
எந்தைபிரான் மணிமன்றம் எய்தஅறி வேனோ
இருந்ததிசை சொலஅறியேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும் அறிந்திலனே.
—திருவருட்பா, முறையீடு : க.

நல்ல மருந்திம் மருந்து—சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து.

அம்பலத் தாடும் மருந்து—பர
மானந்த வெள்ளத் தழுத்தும் மருந்து
எம்பலம் ஆகும் மருந்து—வேளூர்
என்னும் தலத்தில் இருக்கும் மருந்து. (சங)

சேதப் படாத மருந்து—உண்டால்
தேன்போல் இனிக்கும் தெவிட்டா மருந்து
பேதப் படாத மருந்து—மலைப்
பெண்ணிடங் கொண்ட பெரிய மருந்து. (சச)
—திருவருட்பா, ஆனந்தக்களிப்பு.

அம்பலத்தில் ஆடுகின்றார் வெண்ணிலாவே—அவர்
ஆடுகின்ற வண்ணமென்ன வெண்ணிலாவே. (சரு)

அந்தரத்தில் ஆடுகின்றார் வெண்ணிலாவே—அவர்
ஆடும்வகை எப்படியோ வெண்ணிலாவே. (சசு)

அணுவிலணு வாயிருந்தார் வெண்ணிலாவே—எங்கும்
ஆடுகின்ற வண்ணமென்ன வெண்ணிலாவே. (சஎ)

அண்டபகி ரண்டமெல்லாம் வெண்ணிலாவே—ஐயர்
ஆட்டமென்று சொல்வதென்ன வெண்ணிலாவே. (சஅ)

அம்பரத்தில் ஆடுகின்றார் வெண்ணிலாவே—என்னை
ஆட்டுகின்றார் இம்பரத்தில் வெண்ணிலாவே. (சகூ)
—திருவருட்பா, வெண்ணிலா : ககூ-உங.